International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
(A Peer Reviewed, Referred, Indexed and Open Access Journal)
DOI: 10.22192/ijamr Volume 8, Issue 6 -2021

ஆய்வுக்கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2021.08.06.017

முல்லைத் திணையில் பாணர்கள்

ஆ. சந்திரகலா
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

முன்னுரை

தமிழின் மிகப் பழமையான இலக்கியமாகத் திகழ்வது சங்க இலக்கியமாகும். இச்சங்கப்பாடல்கள் அகம், புறம் என்ற இரண்டு அடிக்கருத்துக்களைக் கொண்டு புனையப்பட்டுள்ளன. மக்களின் இயற்கை உணவுகளுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகள் சமூக தனிமனித உறவுகள், அறங்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள், போராட்டங்கள், மக்களின் குழு வாழ்க்கைமுறை, வாழ்வியல், கலை, பண்பாடு, நாகரிகம், தொழில்கள், பொருளியல் முதலியவற்றை இயல்பு நவிற்சிப் பாங்கில் சங்கப் பாடல்கள் புனைந்துரைத்துள்ளன. மலை, கடல், காடு என பல இடங்களில் உணவினைச் சேகரித்து வாழ்ந்த இனக்குழு சமூக அமைப்பிலிருந்து, வேளாண்மை உற்பத்தியில் வளர்ச்சியடைந்த சமுதாயமாக உருக்கொண்ட மூவேந்தரின் சமுதாயம் வரை பல்வேறு படிநிலை வளர்ச்சியில் உறவாடிக் கொண்டிருந்ததைச் சங்கப்பாடல்களில் தெளிவாகக் காணலாம்.

பாணர்

தமிழ்நாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த குடிகளில் பாணர் குடியும் ஒன்றாகும். நிலைகுடிகளாக இருந்த திணைகுடிகளைச் சார்ந்து வாழ்ந்த குடியாக - அலைகுடியாக இப்பாணர் மரபு காணப்படுகின்றது. ஓரிடத்தில் நிலைத்து வாழாமல் இடம் விட்டு இடம் பெயரும் வாழ்க்கையை மேற்கொண்ட இப்பாணர் சமூகம் வள்ளல்களை நாடிச் சென்று பரிசு பெற்று வாழ்ந்தனர்.

திணைநிலை மாந்தர் குறிஞ்சி, மருதம் முதலான பண்களைப் பாடிய செய்திகள் சங்கப்பாடல்களில் காணக்கிடக்கின்றன. இத்திணைநிலை மாந்தர் பாடுவது அவர்களது தொழிலாக இல்லை. ஆனால் பண் அமைத்துப் பாடல்களைப் பாடுவது பாணர்களின் தொழிலாக இருந்தது.

" பாணன் பறையன் கடம்பனென்

றிந்நான் கல்லது குடியு மில்லை" (புறம் - 335) என்னும் புறநானூற்றுப் பாடலடிகள் வழி பழமை வாய்ந்த நான்கு வகை குடிகளுள் பாணர் குடியும் ஒன்றாக இருந்ததை அறியலாம்.

துடிகொட்டுபவன் துடியன் என்றும், பறை அறைபவன் பறையன் எனவும் வழங்கப்பட்டது போலவே பண் இசைத்தவன் பாணன் எனப்பட்டான். இவர்கள் இசையோடு தொடர்புடைய குடிகளாகவே விளங்கியுள்ளனர். துடி, பறை, யாழ், கடம்பு என்ற இசைக் கருவிகளோடு தொடர்புடைய குடிகளில் ஒன்றாகப் பாணரைப் புலவர் மரபு அடையாளம் கண்டுள்ளது.

பழங்காலச் சமுதாய அமைப்பில் குழு வாழ்க்கையே பெரும்பான்மையாகக் காணப்பட்டது. பாணர் பெரிய சுற்றத்துடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தனர் 'குழு வளர்ச்சி பெறும் பொழுது, பலவித வேலைப் பிரிவுகளும் தோன்றுகின்றன. அவ்வகையில் இசைத்துறையில் வல்லவராகத் திகழ்பவர்களுக்கு அதுவே தொழிலாகிவிடுகியது' என்ற கா. சுப்பிரமணியனின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

பாணர் இசை, கூத்து முதலிய கலைகளில் மிகத்தேர்ச்சி பெற்றவராக விளங்கினர். இக்கலைகளைப் போற்றி வளர்த்தவரும் இவர்களே ஆவர். இக்கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்று வள்ளல்களிடம் கலைத்திறமையைக் காட்டி மகிழ்வித்துப் பொருள் பெறுவது இவர்களது வாழ்க்கை முறையாக இருந்தது.

இசைத்துறையில் சிறந்து விளங்கிய பாணர்கள் பாடல்களைப் பண்ணோடு இசைத்துப் பாடினர். இப்பாணரைப் பற்றிப் புலவர் பலர் தம் பாடல்களில் பாடியுள்ளனர். சிலர் தம்மைப் பாணராக எண்ணியும் பாடல் புனைந்துள்ளனர். இசைத்தொழிலையே அன்றி, பிற தொழில்களையும் பாணர் செய்ததற்குச் சான்றுகள் சங்க இலக்கியத்துள் இருந்தாலும் ஆடல், பாடல் தொழிலையே தம் குலத்தொழிலாகக் கொண்டு விளங்கினர்.

இசைத்துறையில் தேர்ந்தவர்களாகப் பாணர் இருந்ததனைப் பல சங்கப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

"நூல்நெறி மரபின பண்ணின் ஆனாது" (சிறு.பா. 230)

"கைவல் பாண்மகள் கடனறிந்து இயக்க" (சிறு.பா.37)

"கைவல் சீறியாழ் கடனறிந்து இயக்க" (புறம். 398)

என்ற அடிகளின் மூலம் பாணரின் யாழிசைத் திறன் வெளிப்படுகின்றது.

இசைத்துறை பலவற்றிலும் பாணர் தேர்ச்சி பெற்று இருந்ததனை,

"துறைபல முற்றிய பைதீர் பாண" (மலைபடுகடாம் 40)

என்ற பாடலடியின் வழி அறியமுடிகிறது. மேலும் பாணருக்கு இசைத்துறையில் இருந்த அறிவாற்றலைக் காட்டுவதாக,

"பாடின் பனுவற் பாண" (புறம். 127)

என்ற 'புறநானூற்றுப்' பாடலடி அமைந்துள்ளது.

சங்க காலத்தில் இசைத்துறையில் பெண்களும் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் விறலி, பாடினி, ஆடுமகள் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். பாண் சமுகத்தைச் சார்ந்த இவர்கள், ஆடல், பாடல் துறையில் திறம்பட திகழ்ந்தனர். இவர்கள் பாணருடன் வள்ளல்களைக் கண்டு பரிசுபெற இணைந்து சென்றனர்.

சங்கப்பாடல்களில் அகமரபிலும் புறமரபிலும் பாணர்களைப் பற்றிய செய்திகள் அறியக்கிடக்கின்றன.

புறப்பாடல்களில் பாணர்கள்

புறப்பாடல்களில் பாணர்களின் பெரிய சுற்றத்துடன் கூடிய குழு வாழ்க்கை முறையே காணப்படுகிறது. புறமரபில் சுற்றம் சூழ வறுமையிலும் பசியிலும் வாடும் பாணர்கள் தமது கூட்டத்துடன் நீண்ட நெடுந்தூரம் பயணம் செய்து வள்ளல்களை நாடிச்சென்று புகழ்ந்து பாடி பரிசு பெற்று வாழும் நிலையில் காணப்படுகின்றனர். பாணரின் வறுமை நிலையினைப் புறநானூற்றுப் பாடல்களும், ஆற்றுப்படையும் மிக விரிவாகக் கூறுகின்றன.

பாணர் நடந்து செல்லும் வழியின் இயல்புகளைச் சிறுபாணாற்றுப்படை விளக்கிக் கூறுகின்றது. சுட்டெரிக்கும் வெயிலில் பாலை நில வழியே அவர்கள் நடந்து செல்லும் தன்மையை இந்நூல் விரித்துச் சொல்கின்றது.

அவ்வாறு அவர்கள் நடந்து செல்லும் வழியில் உள்ள ஊர்களில் உள்ள மக்கள் பல வித உணவுகளைக் கொடுத்து விருந்தோம்பியதை ஆற்றுப்படை நூல்கள் விரிவாக விளக்குகின்றன. திணைநிலை மக்கள் மட்டுமல்லாது அவர்கள் நாடிச் செல்லும் வள்ளல்களும் இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தனர். மேலும் பல பரிசில்களை அளித்ததனையும் புறப்பாடல்கள் கூறுகின்றன.

பாணர் நாடோடிகளாய் வள்ளல்கள் பலரை நாடிச் சென்று பரிசில் வாழ்க்கை நடத்தினர். இவ்வாறு வாழ்ந்த பாணர் தமக்கென நிலைத்த ஓர் இடத்தைக் கொள்ளவில்லை என்ற போதிலும் நகரங்கட்கு வெளியே புறஞ்சேரிகளில் வசித்ததைச் சில சங்கப்பாடல்கள் குறிக்கின்றன.

பாணர் வசித்த ஊர் 'பாண்சேரி' என அழைக்கப்பட்டதை,

"சிறுசில்

மீன்சீவும் பாண்சேரி"(புறம். 348)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் மூலம் அறியலாம்.

"குருகு நரல மனை மரத்தான

மீன்சீவும் பாண்சேரியோடு" (மதுரைக்காஞ்சி .268-269). மதுரைக்காஞ்சியும் பாண்சேரி குறித்துக் கூறுகின்றது.

அகப்பாடல்களில் பாணர்கள்

புறமரபில் பெரும் சுற்றத்தோடு கூட்டமாகக் காணப்படும் பாணர்கள், அகமரபில் தனியொருவராகவே உள்ளனர். அகமரபில் கற்புக்காலத்தில் கூற்று நிகழ்த்துவதற்கு உரிமையுடையோராகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்படுபவர்களில் பாணன், விறலி ஆகியோரும் அடங்குவர்.

"பாணன் கூத்தன் விறலி பரத்தை

யாணம் சான்ற அறிவர் கண்டோர்

பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா

முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்

தொல்நெறி மரபின் கற்பிற்கு உரியர்" (தொல். செய்யு. 502) என்பது தொல்காப்பிய நூற்பா.

இதுவேயன்றி தலைவன், தலைவியிடத்து ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாக அமைபவர்களில் பாணன், விறலி ஆகிய இருவரும் இடம் பெறுகின்றார்கள் என்பதை,

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி இளையர் விருந்தினர்

கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (தொல். கற்பியல். 193) என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

மேற்கூறிய செய்திகளின் வழி அக இலக்கிய மரபில், அகத்துறைகளில் இடம்பெறும் கூற்றுக்களிலும், வாயில்களிலும் பாணன் இடம்பெறுவதை உணரலாம். இசை, கூத்து ஆகிய கலைகளோடு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பாணர்கள் அகஇலக்கிய நாடக மரபில் பாத்திரங்களாக இடம்பிடித்தது இயல்பு என்றே சொல்லலாம்.

அகத்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளில் மருதம், மருத உரிப்பொருள் கொண்ட நெய்தல், முல்லை ஆகிய அகத்திணைகளில் பாணனின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

வாயிலாகவும், தூதுவனாகவும் பாணன் இருந்துள்ளமைக்குச் ; சங்கஇலக்கியப் பாக்கள் சான்று பகர்கின்றன. ஊடல் உணர்வில் இருக்கும் தலைவியை எதிர்ப்பட்டு, பாணன் அவளிடம் பலவிதமான பொய்யையும், புனைவுகளையும் கூறி ஊடல் தீர்க்கின்றான். தலைவன், தலைவி, தோழி ஆகிய அகநாடகப்பாத்திரங்களோடு நேரடித்தொடர்பு கொண்டவனாகப் பாணன் உள்ளான். தலைமாந்தரின் கற்புவாழ்க்கையோடு பாணன் தொடர்பு கொண்டுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத் திணையில் பாணரின் நிலை

காடும் காடு சார்ந்த பகுதியான முல்லைத் திணையின் உரிப்பொருளாக ‘இருத்தலும் இருத்தல் நிமித்தமும் சுட்டப்படுகின்றது.

தலைவன் பொருள் காரணமாகவோ, போரின் காரணமாகவோ தலைவியைப் பிரிந்து செல்லும் போது தலைவியானவள் மிகவும் துயருற்று இருப்பதைக் கண்டு, அவள் துன்ப நிலையைத் தலைவனுக்குக் கூறி அவனை விரைவில் வினைமுடித்து வரச்செய்யும் தூதுவனாக முல்லைத் திணைப் பாடல்களில் பாணன் காணப்படுகின்றான்.

“நிலம் பெயர்ந்து உரைத்தல் அவள்நிலை உரைத்தல்

கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய” (தொல். கற்பியல் .169)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் மூலம் தலைவன் இருக்கும் இடத்திற்கு, அவன் பிரிவின் போது சென்று உரைத்தலும், தலைவியினது நிலையைத் தலைவனுக்குக் கூறலும் பாணர்க்கு உரியன என்பதை அறியமுடிகிறது. இந்நூற்பாவிற்கு ஏற்ப தலைவன் இருக்கும் பாசறைக்குச் சென்று தலைவியின் துன்ப நிலையைக் கூறும் செய்திகள் முல்லைத் திணையில் அமைந்த பாடல்களில் உள்ளன.

“அருந்துய ருடையள் அவளென விரும்பிப்

பாணன் வந்தனன் தூதே” (அகம். 224)

மேற்கூறப்பட்ட பாடல், தலைவன் போருக்குப் பிரிந்த வேளையில் பாசறையிடத்துத் தலைவிக்காகப் பாணன் தூது சென்றதைத் தலைவன் பாகனிடம் கூறுமுகமாக அமைந்துள்ளது.

மேலும் 'தலைவியின் நிலையை உரைத்தற்குரியவன் பாணன்' என்பதை உணர்த்தும் வகையில்,

"நீடினம் என்ற கொடுமை தூற்றி
வாடிய நுதலாகிப் பிறிது நினைந்து
யாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே" (ஐங்குறு. 428)

என்று அமைந்த இப்பாடலில் தலைவியின் தூதுவனாகப் பாணன் வந்ததைக் கண்டு மகிழ்ந்த தலைவன், 'முல்லை யாழை உடைய பாணனே தலைவியின் நிலையை எமக்குக் கூறுக' என்கிறான்.

"சொல்லுமதி பாண சொல்லுதோ றினிய
நாடிடை விலங்கிய எம்வயின் நாடோறும்
அரும்பனி கலந்த அருளியல் வாடை
தனிமை எள்ளும் பொழுதின்
பனிமலர்க் கண்ணி கூறிய தெமக்கே" (ஐங்குறு. 479)

என்ற பாடல் தலைவன் தலைவியின் நிலையினைக் குறித்துப் பாணனிடம் கேட்பதாக அமைந்துள்ளது. இதன் மூலம் பாணன் பாசறையிடத்துத் தூது சென்று தலைவியின் துன்ப நிலையைக் கூறும் இயல்புடையன் என்பதை அறியமுடிகிறது.

தலைவனிடம் தூது செல்லும் பாணன், தலைவன் விரைவில் வினைமுடிந்து வாராது காலம் நீட்டிக்கும் வேளைகளில் தலைவனை இடித்துரைக்கவும் செய்வான் என்பதை,

"நினக்குயாம் பாணரும் அல்லேம் எனக்கு
நீயும் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
யீரித ழுண்க ணுகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே" (ஐங்குறு. 480)

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. இப்பாடலில், 'தலைவியின் கண்ணீரைத் துடைக்கவில்லை என்றால் நினக்கு யாம் பாணரும் அல்லேம் எனக்கு நீ தலைவனும் இல்லை' என்று இடித்துக் கூறுவதைக் காணமுடிகின்றது.

தலைவனிடத்துப் பாசறைக்குத் தூது போவதோடு, பாசறையில் இருந்து தலைவியிடம் தூது செல்லும் செயலையும் பாணன் ஆற்றியுள்ளான். இதனை முல்லைத் திணைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. சான்றாக,

"பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொடு அரும்படர் உழப்போள்
கையறு நெஞ்சிற்கு உயவுத் துணையாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்னாற் பாணஎம் தேரே"(ஐங்குறு. 477)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அமைந்துள்ளது. இதில் தலைவன் பாணனைத் தலைவியிடம் தூது அனுப்பித் தலைவிக்கு உசாத்துணையாகச் சிறிது போது தங்கி அவள் துன்பத்தைப் போக்கும்படி கூறுகின்றான்.

இதன் மூலம் பாணன், தலைவனின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

தலைவன் பிரிவை ஆற்ற இயலாத தலைவி பாணனிடம் தன் துன்ப நிலையைக் கூறி அதனைத் தலைவனுக்கு மறக்காமல் உணர்த்தவேண்டும் என்று கூறுகின்றவகையில்,

"பலர்புகழ் சிறப்பின்நுங் குருசில் உள்ளிச்
செலவு நீ நயந்தனை யாயின், மன்ற
இன்னா அரும்பட ரெம்வயிற் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணவெம் மறவா தீமே" (ஐங்குறு. 473)

என்ற பாடல் அமைந்துள்ளது.

மேலும், பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவேன் என்று கூறிச்சென்ற காலம் வந்து விட்டது. ஆனால் பாணனே தலைவன் இன்னும் வரவில்லை என்பதை,

"கைவல் சீரியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே
எம்மின் உணரா ராயினும், தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யா ராகுதல் நோகோ யானே" (ஐங்குறு. 472)

என்ற பாடலடிகள் வழி அறியலாம்.

தலைவனின் தூதுவனாக வரும் பாணனிடம் தோழி, உந்தன் தலைவன் பிரிந்து சென்று வெகு நாட்கள் ஆகிய பின்னும் வரவில்லை, ஆதனால் எம் தலைவி மிகவும் துயருற்று இருக்கிறாள் என்பதை,

"எல்வளை நெகிழ. மேனி வாடப்
பல்லிதழ் உண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குரிசில்
அதுமற் றுணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி என்னவர் தகவே"(ஐங்குறு. 471)

என்ற பாடல் விளக்குகிறது.

மேலும் தலைவன் பிரிவால் துன்பமடையும் தலைவியின் நிலைகண்டு, தானே தலைவன் இருப்பிடத்திற்குச் சென்று அழைத்து வருவதாகப் பாணன் கூற. அவன் அறிவு நன்றாகவே உள்ளது என்று நகைத்துக் கூறும் இடமும் உள்ளது. இதனை,

"சென்றவர்த் தருகுவ லென்னும்
நன்றா லம்ம பாணன தறிவே" (ஐங்குறு. 474)

என்ற அடிகளால் அறியமுடிகிறது. இச்செய்தியின் வழி பாணன் நல்ல செயல்களைச் செய்தாலும் அவன் செயல்கள் நகைப்புடன் சார்புபடுத்தி எள்ளி நகையாடப்பட்டான் என்று கருத இடமுள்ளது.

பாணனைப் புகழ்தல்

பாணன் ஒரு சில சமயங்களில் புகழ்ந்து கூறப்படுவதையும் முல்லைத் திணைப் பாடல்களில் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக,

“தொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநலன் இழந்தவென் கண்ணும் நோக்கிப்
பெரிதுபுலம் பினனே சீறியாழ்ப் பாண
னென்வெங் காதலொடு பரிந்தோர்
தம்மோன் போலான் பேரன் பின்னே”(ஐங்குறு. 475)

என்ற பாடலைக் கூறலாம். மேற்கண்ட பாடலில் தலைவி, தலைவன் தன்னை துன்பத்தில் ஆழ்த்திப் பிரிந்து சென்றான். ஆயினும் இச்சீறியாழ்ப் பாணன் எம் துன்பம் நோக்கிப் பெரிதும் புலம்பினான். ஆகையால் இப்பாணன் அன்பில்லாத தன் தலைவன் போல் அல்லாமல் மிகுந்த பேரன்புடையவன் என்று தலைவி பாணனைப் புகழ்ந்து கூறுகிறாள். இவ்வகையில் அமைந்த அகத்திணைப் பாடல்கள் மிக அரிதாகவே கிடைக்கின்றன.

பிரிந்து கூடி இனிதாக இல்லறம் நடத்தும் தலைவனின் குடும்பத்திற்குப் பாணன் தனது யாழிசையால் இன்பமூட்டும் இனிய காட்சிகளை ‘ஐங்குறுநூறு’ முல்லைப் பாடல்கள் சித்திரித்துள்ளதை,

“பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே”

(ஐங்குறு. 408)

“நயந்த காதலந் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்து
இன்புறு புணர்ச்சி நுகரும்
மென்புல வைப்பின் நாடுகிழ வோனே” (ஐங்குறு. 407)

என்ற பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. பாணர் தலைவனின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக வாழ்ந்து, அக்குடும்பத்தினர்க்கு யாழிசையின் இன்பத்தை அளித்து வாழ்ந்தனர் என்ற வெ. வரதராசனின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

தொகுப்புரை

முல்லைத் திணைப் பாடல்களில் இடம்பெற்ற பாணன் தலைவனுக்கு மட்டுமின்றி தலைவிக்கும் உற்ற நண்பனாகவும், அகத்தூதுவனாகவும் காணப்படுகிறான். மருதம், நெய்தல் திணைப்பாடல்களில் வரும் பாணனைவிட இவன் மேம்பட்டவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான்.

முல்லைத் திணையில் தலைவியின் துன்பநிலை கண்டு கலங்கித் தலைவனிடம் சென்று தலைவனை, விரைவில் வரவேண்டும்' என்று உணர்த்தும் தூதுவராகவே காணப்படுகின்றனர். முல்லையின் உரிப்பொருள் 'இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆதலால் தலைவி தலைவனின் பிரிவிடத்து ஆற்றவியலாது துன்புறும் வேளையில் பாணன் தலைவியை ஆற்றுவிக்கும் செயலையும் செய்பவனாக உள்ளான்.

மேலும் யாழ் மீட்டித் தலைவன் தலைவியை மகிழ்விக்கின்றான். முல்லைத் திணையில் பாணன் தலைவனுக்கு மட்டுமில்லாமல் தலைவிக்கும் நல்ல நண்பனாக அகத் தூதுவனாக உள்ளான். மருதத்தில் பாணனின் நிலை சற்று இழிந்ததாகவும், முல்லையில் மேம்பட்டதாகவும் அமைந்ததற்குத் தலைவனின் செய்கையே காரணம் எனலாம்.

முல்லையின் தலைவன் போர் மற்றும் பொருள் காரணமாக மேற்கொண்ட ஆள்வினை ஒழுக்கத்தால், பிரிவுற்ற அவனுக்கும் அவன் தலைவிக்கும் இடையே துன்பம் தணிக்கும் உற்ற நண்பனாகவும், தூதுவனாகவும் பங்காற்றிய பாணனின் நிலை மேம்பட்டதாகக் காணப்படுகிறது.

துணை நின்ற நூல்கள்

1. உ.வே. சாமிநாத ஐயர்(தொ.ஆ), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்.
2. பொ.வே. சோமசுந்தரனார், அகநானூறு, கழக வெளியீடு, சென்னை.
3. பொ.வே. சோமசுந்தரனார், ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை.
4. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.
5. பேராசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், கழகப்பதிப்பு சென்னை.
   கா. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

7. வெ. வரதராசன், தமிழ்ப்பாணர் வாழ்வும் வரலாறும், பண்ணன் பதிப்பகம், சென்னை.
8. எம். நாராயண வேலுப்பிள்ளை (உ.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், முல்லை நிலையம், சென்னை.

இந்தக் கட்டுரையை இணையத்தில் அணுகவும்

இணையதளம்: www.ijarm.com

பொருள்: தமிழ்

விரைவுப் பதிலளிப்புக் குறியீடு

DOI:10.22192/ijamr.2021.08.06.017

இக்கட்டுரையை எவ்வாறு மேற்கோள் காட்டுவது:
ஆ. சந்திரகலா. (2021). முல்லைத் திணையில் பாணர்கள். Int. J. Adv. Multidiscip. Res. 8(6): 240-250.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2021.08.06.017